முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | L.A.O.P | 100 | of | 2024 |

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 –ம் நாளான இன்று

கோருரிமைதாரர் தரப்பில் சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கருணாகரன் |
| தந்தை பெயர் | கோவிந்தன் |
| கிராமம் | |
| தொழில் | |
| வயது | 47 |

நாள் 27 .03.2026 – எ.ம.சா.1 (RW1)

**முதல் விசாரணை**

நான் 1வது எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை.

**குறுக்கு விசாரணை**

இந்த நிலம் ஆர்ஜிதம் செய்யும் போது நான் தாசில்தாரராக பணியில் இல்லை என்றால் சரிதான். அவர்கள் எந்த எந்த ஆவணங்கள் எடுத்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வல்லம், வடகால், மாத்தூர் ஆகிய இடங்களில் பெரிய நிறுவனங்கள் உள்ளது என்றால் தொழிற்சாலைகள் உள்ளது. பண்ருட்டி கிராமம்

என்பது திரும்பெரும்புதூர் முதல் செங்கல்பட்டு செல்லும் சாலை மார்க்கத்தில் உள்ளது என்றால் மேற்படி சாலைக்கு உட்புறமாக உள்ளது. காஞ்சிபுரம் முதல் சென்னை செல்லும் சாலை ஒட்டி பண்ருட்டி கிராமம் உள்ளது என்றால் சரியல்ல. பண்ருட்டி அருகில் வாரணவாசி என்ற ஊர் உள்ளது என்றால் சரிதான். வாரணவாசி பஸ் நிறுத்தத்தின் அருகில் தான் பண்ருட்டி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. காஞ்சிபுரம் சென்னை சாலை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதா என்றால் தேசிய நெடுஞ்சாலை துறை விரிவாக்கம் செய்துள்ளது. அந்த சாலை தாம்பரத்தில் ஜிஎஸ்டி ரோடு சென்றடைகிறது என்றால் சரிதான். பண்ருட்டி தற்போது நிறுவனங்களும் சாலை விரிவாக்கங்களும் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது என்றால் பண்ருட்டியில் நிறுவனங்கள் எதுவும் இல்லை. எனக்கு முன்பு இருந்த அதிகாரிகள் ஆவணங்களை சரிபார்க்காமல் நில ஆர்ஜிதம் செய்து நில உரிமையாளர்களுக்கு குறைவான இழப்பீடு தொகை வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தான் சரியான ஆவணங்கள் என்றும், அதன் படி தான் நாங்கள் இழப்பீடு வழங்கியிருக்க வேண்டும் என்றும், தவறுதலாக நாங்கள் இழப்பீடு வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி கோரிக்கையாளருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.